# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

## TNPSC GROUP I, II, IIA, IV - 2023

**19th Batch**
**Test - 17**

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி, மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழிநின்று மனிதம் போற்று!!

1) பின்வரும் எந்த வகைக் காடுகள் “சோலாஸ்” என்று அழைக்கப்படுகிறது?
A. வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள் B. வெப்பமண்டல ஈரப்பத இலையுதிர் காடுகள்
C. மிதவெப்ப மண்டல மலைக்காடுகள் D. வெப்ப மண்டல அறை - பசுமைமாறாக் காடுகள்
E. விடை தெரியவில்லை

2) பின்வருவனவற்றில் கரிசல் மண்ணின் பண்புகள் தொடர்பான கூற்றுகளில் சரியானது எது?
1. இது பொதுவாக ஆழமான, நீரை ஊடுருவ விடாத களிமண் தன்மை கொண்டது.
2. இது மழைக்காலத்தில் ஈரமடையும் பொழுது மிகவும் உப்பலாக காணப்படுகிறது.
3. இது வறண்ட பருவத்தில், ஈரப்பதம் ஆவியாகி, மண் சுருங்கி பரந்த விரிசல்களுடன் காணப்படுகிறது.
A. 1 மட்டும் B. 1 (ம) 2 C. 3 மட்டும் D. 1, 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

3) தோட்ட விவசாயத்துடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்வு செய்க.
1. இத்தகைய வேளாண்மையில், பயிர் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு அந்நிய செலவாணியை ஈட்டித் தருவதற்காக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
2. பரந்த நிலத்தில் ஒரே ஒரு பயிர் மட்டும் விளைவிக்கப்படுகிறது.
3. தேயிலை, காப்பி, ரப்பர் போன்றவை தோட்டப்பயிர்களாகும்.
A. 1 (ம) 3 B. 1 (ம) 2 C. 2 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

4) இந்தியாவில் மிகப்பெரிய சதுப்பு நில காடுகள் காணப்படும் பகுதியானது கீழ்க்கண்டவற்றுள் எங்கு அமைந்துள்ளது?
A. காவிரி ஆற்றுப்படுகை B. கங்கை ஆற்றுப்படுகை C. கோதாவரி ஆற்றுப்படுகை
D. கிருஷ்ணா ஆற்றுப்படுகை E. விடை தெரியவில்லை

5) கூற்று (A) : கிழக்கு இமய மலைத்தொடரின் உயரம் மேற்கு இமய மலை தொடரைப்போல் அல்லாமல் விரைந்து உயர்கின்றது.
காரணம் (R) : உலகின் மிக உயரமான சிகரங்களான எவரெஸ்ட் மற்றும் கஞ்சன்ஜங்கா போன்றவை அமைந்திருப்பதால்
A. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம்.
B. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம் அல்ல.
C. A சரி ஆனால் R தவறு.
D. A தவறு ஆனால் R சரி.
E. விடை தெரியவில்லை

6) கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றில் இந்தியாவின் விவசாயம் தொடர்பான சரியான கூற்றுகள் எவை?
1. உலகளவில் இந்தியா தேயிலை, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.
2. பசுமைப் புரட்சியின் மூலமாக இந்தியா, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது.
A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

7) தமிழ்நாட்டின் முதல் கடலோர காற்றாலை பண்ணை எங்கு அமைந்துள்ளது?
A. கயத்தாறு B. தனுஷ்கோடி C. முப்பந்தல் D. கன்னியாகுமரி E. விடை தெரியவில்லை

8) பொருத்துக.
a. சொஜிலா கணவாய் - 1. அருணாச்சல பிரதேசம்
b. யாங் யப் கணவாய் - 2. ஹிமாச்சல பிரதேசம்
c. நிதி கணவாய் - 3. ஜம்மு மற்றும் காஷ்மீர்
d. ரோஹ்தாங் கணவாய் - 4. உத்திரகாண்ட்
A. 3 1 2 4 B. 1 3 4 2 C. 3 1 4 2 D. 1 4 2 3 E. விடை தெரியவில்லை

9) 1. இந்த மண் உருவாவதற்கு தாய் பாறையில் உள்ள பொருட்களுடன் காலநிலையின் நிலைமைகள் முக்கிய காரணிகளாகும்.
2. இந்த மண் ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் திறனுக்கு நன்கு அறியப்பட்டதாகும்.
3. இந்தியாவில் மூன்றாவது மிகப்பெரிய மண் வகையைச் சார்ந்தது.
மேலே உள்ள அம்சங்கள் எந்த மண்ணுடன் தொடர்புடையவை?

A. பாலைவன மண் B. வண்டல் மண் C. செம்மண் D. கரிசல் மண்
E. விடை தெரியவில்லை

10) கூற்று (A) : மௌசின்ராம் இந்தியாவிலேயே அதிக மழையைப் பெறுகிறது.
காரணம் (R) : தென்மேற்கு பருவமழையின் ஈரப்பதம் நிறைந்த காற்று (வங்கான விரிகுடா கிளை) காசி, காரோ மற்றும் ஜெயந்தியா மலைகளில் மோதி திடீரென புனல் வடிவமாக எழுகிறது.
A. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம்.
B. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம் அல்ல.
C. A சரி ஆனால் R தவறு.
D. A தவறு ஆனால் R சரி.
E. விடை தெரியவில்லை

11) கீழே கொடுக்கப்பட்டுள்ள இமயமலைச் சிகரங்களை அதன் உயரங்களின் அடிப்படையில் இறங்குவரிசையில் எழுதுக.
1. கஞ்சன்ஜங்கா 2. காட்வின் ஆஸ்டின் 3. தௌலகிரி 4. நந்தாதேவி
A. 1 2 3 4 B. 1 2 4 3 C. 4 3 2 1 D. 2 1 3 4 E. விடை தெரியவில்லை

12) இந்தியாவில் கடகரேகை கோட்டிற்கு மிக அருகாமையில் அமைந்துள்ள இடம் எது?
A. ராஜ்கோட் B. கொல்கத்தா C. இம்பால் D. ஐஸ்வால் E. விடை தெரியவில்லை

13) கூற்று (A) : தமிழ்நாடு தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் அதிக மழைப்பொழிவைப் பெறுவதில்லை.
காரணம் (R) : இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பகுதியில் அமைந்துள்ளது.
A. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம்.
B. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம் அல்ல.
C. A சரி ஆனால் R தவறு.
D. A தவறு ஆனால் R சரி.
E. விடை தெரியவில்லை

14) கூற்று (A) : இந்தியாவில் தென்கிழக்கு வியாபாரக் காற்று கடுமையான இடி மற்றும் மின்னலுடன் கூடிய பலத்த மழையைக் கொண்டு வருகிறது.
காரணம் (R) : பூமத்திய ரேகையைத் தாண்டிய பிறகு தென்கிழக்கு வியாபாரக் காற்று கொரியாலிஸ் விசையின் காரணமாக வலதுபுறமாகத் திசை திருப்பப்பட்டு தென்மேற்குப் பருவக்காற்றாக மேற்குக் கடற்கரையை அடைகிறது.
A. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம்.
B. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம் அல்ல.
C. A சரி ஆனால் R தவறு.
D. A தவறு ஆனால் R சரி.
E. விடை தெரியவில்லை

15) பின்வருவனவற்றுள் இமயமலையில் உள்ள முக்கிய கணவாய்களை மேற்கிலிருந்து கிழக்காக வரிசைப்படுத்துக.
1. ஜெலிப்லா 2. சிப்கிலா 3. பொமிடிலா 4. பராலாச்சா லா கணவாய்
A. 1 2 4 3 B. 1 3 4 2 C. 4 2 1 3 D. 4 1 2 3 E. விடை தெரியவில்லை

16) தவறான இணையைத் தேர்ந்தெடு.
A. இந்திய வானிலை ஆராய்ச்சிக் கழகம் - புதுடில்லி.
B. இந்திய அயன மண்டல வானிலை ஆராய்ச்சிக் கழகம் - பூனா.
C. தேசிய கடல்சார் தொழில்நுட்பக் கழகம் - சென்னை.
D. தேசிய கடல்சார் நிறுவனம் - புவனேஷ்வர்.
E. விடை தெரியவில்லை

திண்ணை

17) கூற்று (A) : ஈர அயன பிரதேசங்களில் உள்ள மண், இலை மக்குகள் இன்றி காணப்படுகிறது.
காரணம் (R) : அதிக மழைப்பொழிவு, இலை மக்குகளை அடித்துச் செல்கிறது.
A. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம்.
B. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம் அல்ல.
C. A சரி ஆனால் R தவறு.
D. A தவறு ஆனால் R சரி.
E. விடை தெரியவில்லை

18) பின்வருவனவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க.
1. வடக்கிலிருந்து வீசும் காற்று புவியின் சுழற்சியினால் திசை மாறி வட மேற்காக வீசுகிறது. இது பின்னடையும் பருவக்காற்று ஆகும்.
2. வடக்கிலிருந்து வீசும் காற்று, புவியின் சுழற்சியினால் திசை மாறி வடகிழக்காக வீசுகிறது. இது பின்னடையும் பருவக்காற்று ஆகும்.
A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

19) பின்வருவனவற்றில் சாத்பூரா மற்றும் விந்திய மலைக்கு இடையே ஓடும் ஆறு எது?
A. மாஹி B. பெட்வா C. தபதி D. நர்மதா E. விடை தெரியவில்லை

20) பின்வருவனவற்றிலிருந்து வண்டல் மண்ணில் உள்ள வேதியியல் கலவையை தேர்ந்தெடுக்க.
A. பொட்டாசியம், பாஸ்போரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் இலைமக்குச் சத்துக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால் நைட்ரஜன் குறைவாக உள்ளது.
B. நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்போரிக் அமிலம் மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் அதிகமாக காணப்படுகின்றன. ஆனால் இலை மக்குச் சத்துக்கள் குறைவாக உள்ளது.
C. நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்போரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் இலை மக்குச் சத்துக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால் இதர தாதுக்கள் குறைவாக உள்ளது.
D. நைட்ரஜன், பாஸ்போரிக் அமிலம் மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் குறைவாக உள்ளன. ஆனால் இலை மக்குச் சத்துக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.
E. விடை தெரியவில்லை

21) கீழ்க்கண்டவற்றுள் இந்தியாவில் உற்பத்தி ஆகாத சிந்து நதியின் துணையாறு எது?
A. பியாஸ் B. சட்லெஜ் C. ராவி D. செனாப் E. விடை தெரியவில்லை

22) பின்வருவனவற்றிலிருந்து தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

| மேற்கு கடற்கரை சமவெளி | | விரிவாக்கங்கள் |
|---|---|---|
| 1. கத்தியவார் சமவெளி | - | ரான் ஆ∴ப் கட்ச் முதல் டாமன் வரை |
| 2. கனரா கடற்கரை | - | டாமன் முதல் கோவா வரை |
| 3. கொங்கன் கடற்கரை | - | கோவா முதல் மங்களூர் வரை |
| 4. மலபார் கடற்கரை | - | மங்களூர் முதல் கன்னியாகுமரி வரை |

A. 1 (ம) 2 B. 1 (ம) 3 C. 2 (ம) 3 D. 1 (ம) 4 E. விடை தெரியவில்லை

23) டிரான்ஸ் இமாலயத்தில் அமைந்துள்ள மலைத்தொடர்களை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இறங்குவரிசையில் வரிசைப்படுத்துக.
1. லடாக் 2. காரகோரம் 3. கைலாஷ் 4. சாஸ்கர்
A. 2 3 4 1 B. 3 4 1 2 C. 2 1 4 3 D. 2 4 3 1 E. விடை தெரியவில்லை

24) தென்மேற்கு பருவமழையின் போது பூனாவை விட மும்பை ஏன் அதிக மழைப்பொழிவை பெறுகிறது?
A. மும்பை மேற்குத் தொடர்ச்சி மலையின் காற்றோட்டப் பகுதியில் உள்ளது.
B. மும்பை மேற்குத் தொடர்ச்சி மலையின் காற்று மோதாப் பக்கம் உள்ளது.
C. பூனாவை விட அடர்ந்த காடுகள் மும்பையில் உள்ளன.
D. மும்பை மேற்கு இந்தியாவின் கடலோரப் பகுதியில் அமைந்துள்ளது.
E. விடை தெரியவில்லை

25) கிழக்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் எது?
A. பச்சை மலை B. சோலைக்கரடு C. இரத்தினமலை D. மருந்துவாழ்மலை
E. விடை தெரியவில்லை

26) குற்றால நீர்வீழ்ச்சி ................. ஆற்றுக்கு குறுக்காக அமைந்துள்ளது.
A. தாமிரபரணி B. பெண்ணையாறு C. சிற்றாறு D. வைகை E. விடை தெரியவில்லை

27) இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகள் எந்த நிகழ்வின் காணமாக மழையைப் பெறுகின்றன?
A. பின்னடையும் பருவக்காற்று B. மேற்கத்திய தொந்தரவுகள் C. இடியுடன் கூடிய உள்ளூர் மழை
D. தென்மேற்கு பருவக்காற்றின் வங்காள விரிகுடா கிளை E. விடை தெரியவில்லை

28) பின்வருவனவற்றை வடக்கிலிருந்து தெற்கு திசையில் வரிசைப்படுத்துக.
1. சோட்டா நாக்பூர் பீடபூமி 2. ராஜ்மஹால் மலைகள் 3. மைக்காலா குன்றுகள் 4. அஜந்தா குன்றுகள்
A. 3 4 2 1 B. 2 1 3 4 C. 3 1 4 2 D. 1 2 3 4 E. விடை தெரியவில்லை

29) பொருத்துக.
a. பாபர் - 1. பழைய வண்டல் படிவு
b. தராய் - 2. புதிய வண்டல் படிவு
c. பாங்கர் - 3. பலதரப்பட்ட படிவுகள்
d. காதர் - 4. ஈரப்பதம் கொண்ட பகுதி
A. 2 1 3 4 B. 4 3 2 1 C. 3 4 1 2 D. 1 3 4 2 E. விடை தெரியவில்லை

30) தவறான இணையைத் தேர்ந்தெடுக்க. (மாநிலங்களுக்கு இடையான நதிநீர் பிரச்சனை)
1. கிருஷ்ணா நீர் - மஹாராஷ்டிரா, கர்நாடகம் மற்றும் ஆந்திரப்பிரதேசம்
2. நர்மதா நீர் - ராஜஸ்தான், குஜராத், மஹாராஷ்டிரா மற்றும் மத்தியபிரதேசம்
3. காவேரி நீர் - கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு
4. ராவி மற்றும் பியாஸ் நீர் - பஞ்சாப் மற்றும் ஹரியானா
A. 1 மட்டும் B. 2 (ம) 4 C. 3 மட்டும் D. 4 மட்டும் E. விடை தெரியவில்லை

31) பொருத்துக.

| காலநிலை | காரணம் |
|---|---|
| a. கொல்கத்தாவை விட சென்னை வெப்பமானது | - 1. கடலில் இருந்து உள்ள தூரம் |
| b. இமயமலையில் பனிப்பொழிவு | - 2. உயரம் |
| c. மேற்குவங்கம் முதல் பஞ்சாப் வரை மழைப்பொழிவு குறைதல் | - 3. மேற்கத்திய இடையூறு |
| d. குளிர்கால மழைப்பொழிவு | - 4. அட்சரேகை |

A. 1 2 4 3 B. 1 2 3 4 C. 3 2 4 1 D. 4 2 1 3 E. விடை தெரியவில்லை

32) கூற்று (A) : கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகள் "தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு" என அழைக்கப்படுகிறது.
காரணம் (R) : இப்பகுதிகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கியப் பங்களிப்பை அளிக்கின்றன.
A. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம்.
B. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம் அல்ல.
C. A சரி ஆனால் R தவறு.
D. A தவறு ஆனால் R சரி.
E. விடை தெரியவில்லை

33) எந்த விவசாய வகை "ஜீம்மிங்" என்று அழைக்கப்படுகிறது?
A. வறண்டநில விவசாயம் B. தீவிர விவசாயம் C. கலப்பு விவசாயம் D. இடப்பெயர்வு விவசாயம்
E. விடை தெரியவில்லை

34) கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.
A. கரிசல் மண், மண்சுவரல் (Leaching) காரணமாக உருவாகிறது.
B. கரிசல் மண் (ரீகர் மண்) தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவாகிறது.
C. செம்மண் இரும்பு மற்றும் அலுமினியத்தின் நீரேற்ற ஆக்சைடுகளால் உருவானது.

D. வண்டல் மண்ணை காதர் மற்றும் பாங்கர் என வகைப்படுத்தலாம்.

E. விடை தெரியவில்லை

35) பொருத்துக.

a. தீப்பாறை - 1. மணற்பாறை

b. படிவுப்பாறை - 2. கிரானைட்

c. உருமாறிய பாறை - 3. லாக்கோலித்ஸ்

d. ஊடுருவிய பாறை - 4. குவார்ட்சைட்

A. 1 4 3 2 B. 2 3 4 1 C. 4 1 2 3 D. 2 1 4 3 E. விடை தெரியவில்லை

36) கூற்று (A) : வண்டல் மண், ஆறுகளின் மூலம் அரிக்கப்பட்டு படியவைக்கப்பட்ட முக்கியப் படிவுகளால் ஆன ஒன்று.

காரணம் (R) : நெல் மற்றும் கோதுமை வண்டல் மண்ணில் நன்கு வளரும்.

A. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம்.

B. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம் அல்ல.

C. A சரி ஆனால் R தவறு.

D. A தவறு ஆனால் R சரி.

E. விடை தெரியவில்லை

37) சரியான இணையைத் தேர்ந்தெடு.

1. வெப்பமண்டல பசுமைமாறா மழைக்காடுகள் - 1. கருங்காலி

2. வெப்பமண்டல இலையுதிர் காடுகள் - 2. பைன்

3. மிதவெப்ப மண்டல இலையுதிர் காடுகள் - 3. மேப்பிள்

A. 1 (ம) 2 B. 1 (ம) 3 C. 2 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

38) வெப்பச் சலன மழை பெரும்பாலும் எந்தப் பகுதியில் பெய்கிறது?

A. மிதவெப்பமண்டலப் பகுதி B. நிலநடுக்கோட்டுப் பகுதி C. துருவப் பகுதி D. பாலைவனப் பகுதி

E. விடை தெரியவில்லை

39) பொருத்துக.

தேசியப் பூங்கா மாநிலங்கள்

a. துத்வா - 1. கர்நாடகம்

b. நாகர்ஹோல் - 2. மத்தியப்பிரதேசம்

c. ரந்தாம்பூர் - 3. உத்திரப்பிரதேசம்

d. கன்கா - 4. இராஜஸ்தான்

A. 3 1 4 2 B. 3 1 4 2 C. 1 2 4 3 D. 1 2 3 4 E. விடை தெரியவில்லை

40) இந்தியாவில் உள்ள ஆல்பைன் காடுகள் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. இந்த காடுகளில் பெரும்பாலும் ஊசியிலை மரங்கள் உள்ளன.

2. இமயமலையின் கிழக்குப் பகுதிகளில் இந்தக் காடுகள் அதிக அளவில் உள்ளன.

3. இம்மரங்கள் கோடைக் காலத்தில் இலைகளை உதிர்த்து விடுகின்றன.

A. 2 (ம) 3 B. 1 (ம) 2 C. 1 (ம) 3 D. 1, 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

41) பின்வரும் எந்த சூழ்நிலையில் சரளை மண் உருவாகிறது?

A. அதிக வெப்பம் மற்றும் மழைப்பொழிவு B. குறைந்த வெப்பம் மற்றும் அதிக மழைப்பொழிவு

C. மிதவெப்பம் மற்றும் குறைந்த மழைப்பொழிவு D. குறைந்த மழைப்பொழிவு மற்றும் அதிக வெப்பம்

E. விடை தெரியவில்லை

42) பொருத்துக.

புல்வெளிகள் பகுதிகள்

a. பிரெய்ரிஸ் - 1. அமெரிக்கா

b. பம்பாஸ் - 2. அர்ஜென்டினா

c. வெல்டு - 3. தென் ஆப்பிரிக்கா

d. டவுன்ஸ் - 4. ஆஸ்திரேலியா

திண்ணை

A. 4 3 2 1 B. 1 2 3 4 C. 3 1 4 2 D. 2 4 1 3 E. விடை தெரியவில்லை

43) கூற்று (A) : பூமத்திய ரேகை பகுதியில் உள்ள அடர்ந்த பசுமைமாறாக் காடுகளில் பல விதமான மரங்கள் மற்ற செடிகள் உண்டு.

காரணம் (R) : பூமத்திய ரேகை பகுதியில் சமச்சீரான வெப்பம் மற்றும் ஈரமான நிலை ஆண்டு முழுவதும் காணப்படும்.

A. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம்.
B. A (ம) R சரி, R ஆனது A-ன் சரியான விளக்கம் அல்ல.
C. A சரி ஆனால் R தவறு.
D. A தவறு ஆனால் R சரி.
E. விடை தெரியவில்லை

44) கீழ்க்கண்டவற்றுள் இந்தியாவில் எந்த பிரதேசம் அதிகளவில் (சதவீதத்தில்) காடுகளின் பரப்பளவைக் கொண்டது?

A. கிழக்குத்தொடர்ச்சி மலை B. கிழக்கு இமயமலை பிரதேசம் C. தீபகற்ப பீடபூமி
D. மேற்குத்தொடர்ச்சி மலை E. விடை தெரியவில்லை

45) பொருத்துக.

a. பட்டு தொழிற்சாலை - 1. மேற்கு வங்காளம்
b. பருத்தி தொழிற்சாலை - 2. கர்நாடகா
c. கயிறு தொழிற்சாலை - 3. மகாராஷ்டிரா
d. சணல் தொழிற்சாலை - 4. கேரளா

A. 2 3 4 1 B. 4 1 3 2 C. 1 3 2 4 D. 3 1 2 4 E. விடை தெரியவில்லை

46) குதிரைக் குளம்பு ஏரி உருவாகும் பகுதி எது?

A. பள்ளத்தாக்கு பகுதி B. மலைப் பகுதி C. சமவெளிப் பகுதி D. டெல்டா பகுதி
E. விடை தெரியவில்லை

47) இலையுதிர் வகைக் காடுகள் பூமியின் எந்தப் பகுதியில் அதிகம் காணப்படுகின்றன?

A. $50^{o}$ முதல் $60^{o}$ வட அட்ச கோடுகளுக்கு இடையில்
B. துணை வெப்ப மண்டலம் மற்றும் மிதவெப்ப மண்டலம்
C. நிலநடுக்கோட்டைச் சுற்றி
D. வருடத்திற்கு 50 செ.மீ குறைவாக மழை பெறும் பகுதி
E. விடை தெரியவில்லை

48) கீழ்க்கண்டவற்றுள் மண் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மாவட்டம் எது?

A. தேனி B. மதுரை C. தஞ்சாவூர் D. இராமநாதபுரம் E. விடை தெரியவில்லை

49) மேற்கு கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள பின்வரும் எண்ணெய் வயல்கள் எது?

1. பேசின் 2. நாகர்காட்டியா 3. ருத்ரசாகர் 4. அலியாபெத் 5. அங்கலேஸ்வர்

A. 1, 2, 3 (ம) 4 B. 2, 3, 4 (ம) 5 C. 1, 2 (ம) 4 D. 1, 4 (ம) 5
E. விடை தெரியவில்லை

50) பொருத்துக.

a. தாராப்பூர் - 1. உத்திரபிரதேசம்
b. இராவத்பட்டா - 2. குஜராத்
c. கக்ரபார் - 3. மும்பை
d. நரோரா - 4. இராஜஸ்தான்

A. 2 3 1 4 B. 1 4 3 2 C. 3 4 2 1 D. 1 3 4 2 E. விடை தெரியவில்லை

51) $5 = 10 = 15 = 20 = \dots\dots\dots\dots\dots$ என்ற கூட்டுத்தொடர் வரிசையில் 24வது உறுப்பு என்ன?

A. 135 B. 130 C. 120 D. 125 E. விடை தெரியவில்லை

52) ஒரு முழு எண்ணுடன் 17-ஐக் கூட்டினால் அந்த எண்ணின் தலைகீழியைப் போல் 60 மடங்காகிறது எனில் அந்த எண்ணைக் காண்க.

A. 3 B. 10 C. 17 D. 20 E. விடை தெரியவில்லை

53) 3 செ.மீ, 4 செ.மீ, 5 செ.மீ பக்க அளவுடைய மூன்று கனசதுரங்கள் உருக்கப்பட்டு ஒரு பெரிய கன சதுரமாக மாற்றப்படுகிறது. சிறிய கனசதுரங்களின் மொத்த புறப்பரப்பிற்கும், பெரிய கன சதுரத்தின் மொத்த புறப்பரப்பிற்கும் உள்ள விகிதம் என்ன?

A. 2:1 B. 3:2 C. 25:18 D. 27:20 E. விடை தெரியவில்லை

54) 66 செ.மீ$^3$ அளவுள்ள கனசதுர வெள்ளி உருக்கப்பட்டு 1 மி.மீ விட்டமுடைய கம்பியாக மாற்றப்படுகிறது எனில் கம்பியின் நீளம் என்ன?

A. 84 மீ B. 90 மீ C. 168 மீ D. 336 மீ E. விடை தெரியவில்லை

55) ஒரு சக்கரம் 10000 முறை சுற்றுவதால் 88 கி.மீ தூரம் கடக்கிறது எனில் அச்சக்கரத்தின் விட்டம் காண்க.

A. 14 மீ B. 2.4 மீ C. 2.8 மீ D. 2.2 மீ E. விடை தெரியவில்லை

56) ஒரு செவ்வகத்தின் அகலம் 8 மீ. அதன் மூலைவிட்டம் 17 மீ எனில் அதன் பரப்பு காண்க.

A. 100 ச.மீ B. 140 ச.மீ C. 160 ச.மீ D. 120 ச.மீ E. விடை தெரியவில்லை

57) தந்தை மற்றும் மகனின் வயதுகளின் கூடுதல் 48. 4 ஆண்டுகளுக்கு முன்பு தந்தையின் வயதானது மகனின் வயதைப்போல் 9 மடங்காகும், 5 ஆண்டுகள் கழித்து மகனின் வயது என்ன?

A. 13 B. 15 C. 18 D. 11 E. விடை தெரியவில்லை

58) ஆனந்த் மற்றும் ரவியின் தற்போதைய வயது விகிதமானது 5 : 2. ரவியின் வயது 3 ஆண்டுகளுக்குப் பின்பு 15 ஆக இருக்கும் எனில் ஆனந்தின் தற்போதைய வயது என்ன?

A. 27 B. 30 C. 35 D. 33 E. விடை தெரியவில்லை

59) குழாய் A (ம) B ஒரு தொட்டியை முறையே 15 (ம) 20 நிமிடங்களில் நிரப்பும். இரண்டு குழாய்களும் திறந்து விடப்பட்ட 4 நிமிடங்கள் கழித்து குழாய் A அடைக்கப்படுகிறது எனில் தொட்டி நிரப்ப ஆகும் நேரம் காண்க.

A. 14 நி 40 நொடி B. 11 நி 45 நொடி C. 12 நி 20 நொடி D. 14 நி 40 நொடி
E. விடை தெரியவில்லை

60) A, B, C முறையே 9, 10, 15 நாட்களில் ஒரு வேலையை முடிப்பர். B-யும், C -யும் ஒரு வேலையைத் தொடங்கி 2 நாட்கள் கழித்து இருவரும் விலகி விடுகின்றனர் எனில் மீதி வேலையை A எத்தனை நாட்களில் முடிப்பார்?

A. $6\frac{2}{3}$ நாட்கள் B. 6 நாட்கள் C. $7\frac{3}{4}$ நாட்கள் D. $6\frac{2}{5}$ நாட்கள் E. விடை தெரியவில்லை

61) ஒரு மனிதன் ஒரு வேலையை தனியாக 5 நாட்களிலும், அவரது மகன் உதவியுடன் 3 நாட்களிலும் முடிப்பார் எனில் அவரது மகன் தனியாக அப்பணியை எவ்வளவு நாட்களில் முடிப்பார்?

A. $12\frac{3}{4}$ நாட்கள் B. $7\frac{1}{2}$ நாட்கள் C. $9\frac{1}{2}$ நாட்கள் D. $7\frac{3}{4}$ நாட்கள் E. விடை தெரியவில்லை

62) மோகன் ஒரு வேலையை 60 நாட்களிலும், கணேஷ் அதே வேலையை 40 நாட்களிலும் செய்தால் இருவரும் சேர்ந்து முடிக்க ஆகும் கால அளவு?

A. 24 நாட்கள் B. 26 நாட்கள் C. 18 நாட்கள் D. 20 நாட்கள் E. விடை தெரியவில்லை

63) 15 ஆண்கள் அல்லது 25 குழந்தைகள் ஒரு வேலையை 80 நாட்களில் முடித்தால் 21 ஆண்கள் மற்றும் 45 குழந்தைகள் அதே வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

A. 27 நாட்கள் B. 30 நாட்கள் C. 41 நாட்கள் D. 25 நாட்கள் E. விடை தெரியவில்லை

64) 90 பேர் 25 நாட்களில் 750 மீட்டர் சுவரைக் கட்ட முடியும் எனில் 47 பேர் 60 நாட்களில் எத்தனை மீட்டர் சுவரைக் கட்டுவர்?

A. 990 மீ B. 950 மீ C. 940 மீ D. 920 மீ E. விடை தெரியவில்லை

65) ஒரு பொருளின் மீது 20%, 15% என அடுத்தடுத்து இரண்டு தள்ளுபடிகள் வழங்கப்பட்டால் உண்மை தள்ளுபடி காண்க.

A. 30% B. 32% C. 34% D. 35% E. விடை தெரியவில்லை

66) இரு கடிகாரங்கள் தலா ரூ.9,856 -க்கு விற்கப்படுகிறது. ஒன்றில் 12% இலாபமும், மற்றொன்றில் 12% நஷ்டமும் ஏற்படுகிறது எனில் ஒட்டுமொத்த இலாப/நஷ்ட சதவீதம் என்ன?

A. 0% நஷ்டம் B. 1.44% நஷ்டம் C. 1.22% இலாபம் D. 1.44% இலாபம்

E. விடை தெரியவில்லை

67) 18 பொருட்களின் விற்பனைவிலை 24 பொருட்களின் அடக்கவிலைக்கு சமம் எனில் இலாப/நஷ்ட சதவீதம் காண்க.

A. $16\frac{2}{3}\%$ நஷ்டம் B. $33\frac{1}{3}\%$ நஷ்டம் C. $16\frac{2}{3}\%$ இலாபம் D. $33\frac{1}{3}\%$ இலாபம்

E. விடை தெரியவில்லை

68) ஒரு தொகை 20% கூட்டுவட்டியில் இரட்டிப்பாக குறைந்தபட்சம் எத்தனை முழு ஆண்டுகள் ஆகும்?

A. 3 ஆண்டுகள் B. 4 ஆண்டுகள் C. 5 ஆண்டுகள் D. 6 ஆண்டுகள் E. விடை தெரியவில்லை

69) ரூ.41,500 ஆண்டுக்கு 5% கூட்டுவட்டியில் முதலீடு செய்யப்படுகிறது. 2 ஆண்டுகள் கழித்து கிடைக்கும் மொத்தத் தொகை எவ்வளவு?

A. ரூ.45,753.75 B. ரூ.46,312.25 C. ரூ.44,217.55 D. ரூ.48,626.75 E. விடை தெரியவில்லை

70) ஒரு கிராமத்தின் மக்கள்தொகை ஆண்டொன்றுக்கு 12% வீதம் அதிகரிக்கிறது. தற்போதைய மக்கள்தொகை 15000 எனில் 2 ஆண்டுகளுக்கு பின் மக்கள் தொகை என்ன?

A. 18612 B. 19424 C. 18222 D. 18816 E. விடை தெரியவில்லை

71) தீர்வு காண்க. $\sqrt{218+\sqrt{38+\sqrt{112+\sqrt{75+\sqrt{36}}}}}$

A. 16 B. 15 C. 14 D. 12 E. விடை தெரியவில்லை

72) $3^{a+b} = 3^{a-b} = 81$ எனில் a-ன் மதிப்பு காண்க.

A. 10 B. 5 C. 4 D. 1 E. விடை தெரியவில்லை

73) மதிப்பு காண்க. $\frac{(3.52 \times 3.52)-(2.48 \times 2.48)}{1.04}$

A. 0 B. 1 C. 6 D. 5 E. விடை தெரியவில்லை

74) ஒரு கல்லூரியில் உள்ள 600 மாணவர்களின் சராசரி வயது 18. கல்லூரியில் இருந்து 50 பேர் பட்டப்படிப்பை நிறைவு செய்து வெளியேறுவதால் சராசரியில் 1 குறைகிறது எனில் வெளியேறிய மாணவர்களின் சராசரி வயது என்ன?

A. 22 B. 25 C. 29 D. 23 E. விடை தெரியவில்லை

75) ஒரு பெட்டியில் 2 சிவப்பு நிற பந்துகள், 2 நீல நிற பந்துகள் மற்றும் 3 பச்சை நிற பந்துகள் உள்ளன. சோதனை முறையில் இரண்டு பந்து எடுக்க அது நீல நிற பந்தாக இல்லாமல் இருக்க நிகழ்தகவு என்ன?

A. $\frac{10}{21}$ B. $\frac{11}{21}$ C. $\frac{2}{7}$ D. $\frac{5}{7}$ E. விடை தெரியவில்லை

திண்ணை

## 19th Batch Test - 17 - Answer Key

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **C** | **D** | **C** | **B** | **A** | **B** | **B** | **C** | **D** | **A** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **D** | **D** | **A** | **A** | **C** | **D** | **A** | **B** | **D** | **A** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **B** | **C** | **C** | **A** | **B** | **C** | **B** | **B** | **C** | **C** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **D** | **A** | **D** | **C** | **D** | **B** | **B** | **B** | **A** | **B** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **A** | **B** | **A** | **C** | **A** | **C** | **B** | **A** | **D** | **C** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **C** | **A** | **C** | **A** | **C** | **D** | **A** | **B** | **A** | **B** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **B** | **A** | **D** | **C** | **B** | **B** | **D** | **B** | **A** | **D** |
| 71 | 72 | 73 | 74 | 75 | | | | | |
| **B** | **C** | **C** | **C** | **A** | | | | | |